## ஏழாலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய
### மகா கும்பாபிஷேக மகோற்சவ விஞ்ஞாபனம்

நிகழும் இராட்சத வருடம் வைகாசி மீ 29ம் நாள் (12-6-75) வியாழக்கிழமை காலை 5-00 மணியளவில் ஏழாலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேக மகோற்சவம் பிரம்மஸ்ரீ சி. சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் நிகழ திருவருள் பாலித்துள்ளது. அவ்வமயம் பக்தர்கள் யாவரும் வருகை தந்து கும்பாபிஷேக வைபவத்தில் பங்கு பற்றி அம்பாளின் அனுக்கிரகத்தை பெற்று ஏகுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

ஏழாலை மேற்கு
சுன்னாகம்

—கோயில் நிர்வாகிகள்.



# சுதந்திரன்
SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2006, வைகாசி, 25 ஜ:அவ் 27 (8-6-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 45


# "இலங்கை தூதரே வெளியேறு"

— இவ்வாறு உலகத்தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் டாக்டர் இரா.சனார்த்தனம் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.



## இயக்கம் சென்னையில் தொடங்கும்!
## செப்டம்பர் 15 வரை காலக்கெடு!

"செப்டம்பர் 15க்குள் இலங்கை அரசின் தமிழர் விரோதப் போக்கில் மாறுதல் ஏற்படவில்லையானால் "இலங்கைத் தூதரே வெளியேறு! என நாங்கள் முழங்குவோம்! சென்னையில் முதலில் ஆரம்பிக்கப்படும் இந்த இயக்கம் உலகில் தமிழர் வாழுகின்ற நாடுகள் அனைத்துக்கும் படிப்படியாக விஸ்தரிக்கப்படும்!"

கடந்த 26. 5. 75ல் சென்னையில் உலகத்தமிழ் இளைஞர் பேரவையினர் இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்டுள்ள அடக்குமுறையைக் கண்டித்து ஓர் கண்டன ஊர்வலத்தை சென்னையில் நடத்தியது. இந்த ஊர்வலத்தின் முடிவில் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரிடம் உலகத்தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் டாக்டர் இரா சனார்த்தனமும், ஏ. எஸ். மணவைத்தம்பியும் ஓர் மகஜரைக் கையளித்தனர். இதன் பின்னர் திரண்டு நின்ற மக்கள் மத்தியில் பேசுகையிலேயே டாக்டர் சனார்த்தனம் மேற்கண்ட அறிவிப்பை விடுத்தார்.

இலங்கைத் தமிழர்களின் அறப்போராட்டத்தை நசுக்குவதற்கு இலங்கை அரசு பின்பற்றி வரும் கொடூர அடக்கு முறைகளை கண்டித்தும், கவிஞர் காசி ஆனந்தனையும் மற்றும் பல இளைஞர்களையும் மீண்டும் கைதுசெய்ததற்கு எதிர்ப்புதெரிவித்தும் 26. 5. 75 திங்கட்கிழமை காலை உலகத் தமிழ் இளைஞர் பேரவை இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியது.

சென்னை அண்ணா சாலையிலுள்ள தபால் நிலையத்துக்கு முன்பிருந்து டாக்டர் இரா. சனார்த்தனம், திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி ஆகியோர் தலைமையில் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் நோக்கி நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் ஏராளமானோர் இலங்கை அரசின் தமிழின ஒழிப்புக் கொள்கையை கண்டிக்கும் முழக்கங்களை யெழுப்பியபடி அனல் போலக் கொதிக்கும் வெய்யிலில் ஊர்வலமாகச் சென்றனர்.

இந்த ஊர்வலத்தின் முடிவில் இலங்கை அரசு ஈழத் தமிழ் மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளை எடுத்துக்காட்டும் மகஜர் ஒன்று இலங்கைத் தூதரிடம் கையளிக்கப்பட்டது. இந்த மகஜரை இலங்கைப் பிரதமருக்கு தாம் அனுப்பி வைப்பதாக தூதரக அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர்!

இலங்கைத் தமிழர்கள் மே 22-ம் திகதி நடத்தவிருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு இலங்கை அரசு தடைவிதித்ததை கண்டித்தும் உலகத்தமிழ் இளைஞர் பேரவை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

### 'இலஸ்ரேட்டட் வீக்லி' ஏட்டுக்கு சனாவின் பதில்!

18. 5. 75 'இலஸ்ரேட்டட் வீக்லி' எனும் இந்திய ஆங்கிலவார இதழில் இலங்கை அரசியல் பிரச்சினை குறித்து

—5-ம் பக்கம் பார்க்க



### இளைஞர் தலைவன்!

தடைகள் எத்தனை போட்டாலும்
  தயங்காதுமுன்னே செல்வோமென
படைகள் சேர்த்து, பாசறை அமைத்து,
  பயிற்சிகள் பல கொடுத்து, விறு
நடை நடந்த தியாகச் செம்மல்
  நம் சிவகுமாரன் நம்மிடமிருந்து
விடை பெற்ற இவ்வோராண்டு
  தினத்திலிருந்து
விரைவில் தமிழரசு காண
  முன்னேறுவோம்.
நெஞ்சம் நிறைந்த தலைவன்
  நல்ல தமிழருக்க குற்ற துணைவன்
பஞ்சம் பட்ட மக்களின்
  பாசமுள்ள பிள்ளை அவன்
வஞ்சம் நிறைந்த துரோகிகளின்
  விரோதியாம் சிவகுமாரனுக்கு
மஞ்சம் கட்டத் தேவையில்லை
  மனமகிழ் தமிழீழம் படைப்போம்.

— கல்லாற்று நடேசானந்தி

## தமிழீழ விடுதலை வீரன் — தியாகி சிவகுமாரன் சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் தலைவிக்கு குப்பிழானில் கொடும்பாவி!

## கைதுசெய்யப்பட்ட இளைஞருக்கு காரைதீவில் பெரும் வரவேற்பு!

## தமிழ் ஈழம் எங்கணும் நடைபெற்ற குடியரசு எதிர்ப்பு போராட்டம்!

சென்ற 22-ம் திகதி தமிழினத்தின் கொடியரசுத் தினமான குடியரசு தினத்தையும் அதற்குமுதல் நாளையும் குப்பிழான் மக்கள் பூரண துக்க தினமாக கொண்டாடினார்கள். அன்றைய தினம் குப்பிழான் தெருக்கள்முழுவதும்வெறிச்சோடிய நிலையில் கிடந்தது. கடைகள் எல்லாம் பூட்டப்பட்டிருந்தன. ஒரு சில பூட்டப்படாத கடைகளும் எமதூர் இளைஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க பூட்டப்பட்டது.

தெருவெல்லாம் தமிழுணர்ச்சியைத் தூண்டும் சுலோகங்களும் கறுத்தக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. கிராமத்தின் நடுச்சந்தியில் 21-ம் திகதி நிரைநிரையாக கட்டப்பட்டிருந்த கறுத்தக் கொடிகளைக் கண்ட பொலீசார் அன்று மாலை அக் கொடிகளை அறுத்தார்கள்.

அறுக்கும் போது அவ்வழியால் சென்ற இளைஞன் ஒருவனை ஒரு பொலிஸ் அழைத்து "என்னடா உங்க ஐயா செத்துப்போனாராடா அதனாலேயோ கறுத்தக் கொடிகள் கட்டினனீங்கள்" என்றாராம்.

உடனே வீராவேசமும் தமிழுணர்ச்சியும் கொண்ட அவ்விளைஞன் "அப்படி எங்க ஐயா ஒரு வரும் சாகவில்லை. எம்மை ஆட்சி செய்கின்ற அம்மாதான் செத்துப் போய்விட்டா. அதனால் தான் கறுத்தக்கொடி கட்டியிருக்கிறோம்" என்று கூறிவிட்டு ஓடிவிட்டாராம். இதனால் மேலும் ஆத்திரம் கொண்ட பொலீசார், குப்பிழானில் கட்டப்பட்டிருந்த அத்தனை கறுத்தக் கொடிகளையும் அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். இதனைப் பார்த்தார்கள் இளைஞர்கள், கோபாவேசம் கொண்டார்கள். உடனேயே இரவிரவாக பல கறுத்தக் கொடிகளும் கட்டி, இந்த நாட்டை ஆளுகின்ற தலைவி போல், ஓர் கொடும்பாவியும் செய்துகட்டித் தூக்கினார்கள். அத்தக்கொடும்பாவிக்கு கீழே உள்ள சுவர்களில் "ஆண்ட தமிழினம் மீண்டும் ஆள்வோம்" "தமிழ் ஈழம் தமிழர் தாகம்" "இறைச்சாலை தமிழன் வீடு" போன்ற உணர்ச்சியூட்டும் சுலோகங்களை எழுதி நாமெல்லாம் தமிழினம் பெற்றெடுத்த வீரச் சிங்கங்கள் என்பதை தெளிவு படுத்தினார்கள்.

அடுத்த நாள் 22-ம் திகதி அவ்வூர் இளைஞர்கள் எல்லோரும் சட்டமறுப்பு ஊர்வலத்தில் கலந்து கொள்ளச் சென்ற சமயம், அதுவரையும் பார்த்தும் பாராமல் சென்ற பொலீசார் மாலை 5 மணியளவில் வந்து கறுத்தக் கொடிகளையும் கொடும்பாவியையும் அறுத்துச்சென்றார்கள்.

### காரைதீவில்

பத்தினித் தெய்வத்தினை வழிபடும் காரைதீவு தமிழ்க் கிராமத்தில் கடந்த 21-ம் 22-ம் திகதி ஸ்ரீலங்கா குடியரசுதின வைபவத்தினைப் பகிஷ்கரிக்கும் பொருட்டு வீதிகளெங்கும் கறுப்புக் கொடிகளை ஏற்றி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துப் பாடசாலையைப் பகிஷ்கரிக்கும்படி சட்ட மறுப்பில் ஈடுபட்ட வாலிபர்களில் ஒரு இளைஞரான திரு. பூபாலபிள்ளை சிறிசித்தானைக்குட்டி என்ற 22 வயதுடைய வாலிபனை சம்மாந்துறைப்பொலிசார் 20-ம் திகதி இரவுகைது செய்து சென்றனர்.

21-ம் திகதி கல்முனையில் வைக்கப்பட்டு அன்று மாலை மட்டுநகர் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றனர். மட்டுநகர் சிறையில் இரண்டு தினங்கள் சிறைவாசத்தை அனுபவித்துவிட்டு 24-ம் திகதி விடுதலை செய்யப்பட்டார். இளைஞரை கல்முனை நீதி மன்றத்திலிருந்து ஊர்வலமாக காரில் அழைத்துச் சென்று காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய முன்றில் வைத்து மலர்மாலை சூடி வரவேற்றனர். முதலில் ஆலயத்தில் வழிபட்டுவிட்டு சுமார் ஆயிரம் வாலிபர்களடங்கிய ஊர்வலம் சிறைமீண்ட சித்தானைக்குட்டியை வழி நெடுகிலும் மாலை சூடி அழைத்துச் சென்றனர்.

வீதியில் "தந்தை செல்வா வழியில் செல்வோம்" தமிழ் மொழி வாழ்க, தனிநாடு அமைப்போம், என்ற கோஷங்களை எழுப்பிச்சென்றனர்.

காரைதீவிலுள்ள அரசு எடுபிடிகளின் கொட்டம் அடக்கும் கோஷங்களும் பிறப்பிக்கப்பட்டன. காட்டிக் கொடுக்கும் கயவர்களைப் பீடித்திருக்கும் தொழுநோயை அகற்றுவதற்கு காரைதீவில் சமாதியடைந்துள்ள சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி உலாவந்தது போல் வீர இளைஞரின் ஊர்வலம் அமைந்திருந்தது. கால்பிடிகளினால் மேலும் பல வாலிபர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டு பொலிஸ் பகுதியினரால் எச்சரிக்கை செய்து விடப்பட்டுள்ளனர்.

எனினும் இளைஞர்களின் "தமிழ் ஈழம் தமிழர்தாகம்" சொழுந்து விட்டு எரிந்த வண்ணம் இருக்கின்றன. கிராமத்தில் பூரண கர்த்தால் அனுட்டிக்கப்பட்டது. தமிழர் கூட்டணி தனிநாடு அமைப்பது விரைவில் நடைபெற்றுவிடும் என்று இச் செயல்கள் வெளிப்படுத்தி விட்டன.

### சைவ மங்கையரின் பகிஷ்கரிப்பு!

தமிழ் ஈழத்திலுள்ள மாணவ மாணவியர் மட்டுமல்ல, சிங்களக் குடியரசின் தலைநகராம் கொழும்பில் வாழ்ந்துவரும் தாமும் தன் மானமுள்ள தமிழ் மாணவியர்தான் என்பதனை 22-ம் திகதி பாடசாலை பகிஷ்கரிப்பின் மூலம் நிரூபித்துக் காட்டிவிட்டனர் கொழும்பிலுள்ள ஒரே இந்து மகளிர் கல்லூரியான சைவ மங்கையர் வித்தியாலய கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு கலைப்பிரிவு மாணவியர்.

நான்கு மாணவத் தலைவியரை உள்ளடக்கிய—இந்த வகுப்பில், முதலாம், இரண்டாம் வருட மாணவியர் உட்பட பெயருக்குத்தானும் ஒருவர் கூட அன்று பாடசாலை செல்லாமல் பகிஷ்கரித்ததன் மூலம், புதிய அரசியலமைப்புச் சட்டமூலம் தமிழர் உரிமைகள் முற்றாகப் பறிக்கப்பட்டமைக்கு, தமது பூரண எதிர்ப்பையும் விரக்தியையும் அரசுக்கு வெளிப்படுத்தினர். பகிஷ்கரிப்புக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கிய அத்தனை மாணவியருமே நிரம்பிய தமிழுணர்ச்சியும், ஆழ்ந்த தாய்மொழிப் பற்றும் கொண்டவர்கள். அன்றைய தினம் தன்மானத் தமிழ் மாணவியர் இன்றி வகுப்பு வெறிச்சோடிக் கிடந்தது.

தமிழ்த் துரோகிகளை இனம் கண்டு அவர்கள் தம் செல்வாக்கைப் பிரயோகிக்க இடம் கொடாமல் பல வருட காலமாக தனித்துவமாக இயங்கிவரும் தனியார் பாடசாலை இது என்பதும் குறிப்பிடத்தக்கது. சைவத்தையும் தமிழுணர்ச்சியையும் தமிழ்க் குழந்தைகளுக்கு ஊட்டி வளர்த்து வரும் இக்கல்லூரி தன்மானத் தமிழ மங்கையரை உருவாக்கியதில் வியப்பில்லைதான்.

தன்மானத் தமிழ்க்குல நங்கையரே, அன்புத் தங்கையரே, சுதந்திர ஈழத் தமிழகத்தின் எதிர்காலத் தலைவியரே உங்கள் துணிச்சலுக்கு தலைவணங்குகிறோம்.

### நெடுந்தீவில்...

குடியரசு தினத்தின் முதல் நாளான 21-5-75ல் தனித் தமிழ் நாடான நெடுந்தீவில் கடைகள் அத்தனையும் பூட்டப்பட்டிருந்தன. எந்தவித அசம்பாவிதங்களுமின்றி மக்கள் துக்கம் அனுஷ்டித்தனர். மாணவர்கள் எவரும் பாடசாலைக்கு செல்லாததால் பாடசாலைகள் களை இழந்து காணப்பட்டன. வீதிகளில் மக்கள் நடமாட்டம் அற்றிருந்தது. இலங்கை போக்குவரத்துச் சபையினரின் வண்டியில் பிரயாணம் செய்தோர் மிகவும் சிலரே. வண்டியின் அன்றைய வருமானம் மற்றைய நாட்களிலும் பார்க்க ¼ பங்கு குறைவாகவே இருந்தது. வழமையான வருமானம் சுமார் ரூபா 150/- அன்றைய வருமானம் சுமார் 40/- ரூபாவே. இங்குள்ள மக்கள் குடியரசை எதிர்க்கின்றனர் என்பதற்கு இது ஒன்றே போதுமானதாகும்.

22-5-75 குடியரசு தினத்தில் இங்குள்ள காரியா[illegible] காரி செயலகத்தில் நடைபெற்ற கொடியேற்று வைபவத்தில் அலுவலக உத்தியோகத்தர் நால்வரும், பொலிஸ்படையைச்சேர்ந்த சிலருமே காணப்பட்டனர். கொடியேற்றும் போது கொடிக்கயிறு அறுந்துவிட்டது. இந்த நிகழ்ச்சி சிங்கள ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியின் அறிகுறியென இதைக் கேள்வியுற்ற மூதாதையர் கூறுகின்றனர்.

விளையாட்டுப் போட்டி ஒழுங்கு செய்தனர் மூன்று நிகழ்ச்சியே நடைபெற இருந்தன. அதிலும் துவிச்சக்கர வண்டிப்போட்டி ஆரம்பமானபோது ஒருவர் மட்டும் ஆயத்தமாக இருந்தார். ஏற்பாடு செய்தவர்கள் ஏமாற்றமடைந்தனர். உடனே ஒரு பொலிஸ்காரர் தனது துவிச்சக்கர வண்டியையும் விளையாட்டதிகாரி தனது வண்டியையும் அங்கு இரு பிள்ளைகளிடம்கொடுத்து மொத்தம் மூன்று பேரை ஓடவிட்டனர். நீச்சல் போட்டிக்கு யாருமே செல்லவில்லை. மேற்கொண்டு விழாக்கள் எதுவுமே நடைபெறவில்லை. மக்கள் சமூகமளிக்காததேகாரணமாகும்.

### அம்பலவாணரும் பங்கேற்றார்!

மட்டக்களப்பில் குடியரசு பகிஷ்கரிப்பு துண்டுப்பிரசுரங்களை கவிஞர் காசி ஆனந்தனுடன் சேர்ந்து விநியோகிப்பதில் மட்டக்களப்பு மாநகரசபையின் உறுப்பினரும் தமிழர் கூட்டணியின் பிரமுகர்களில் ஒருவருமான திரு. ஆர். அம்பலவாணரும் சுறுசுறுப்புடன் ஈடுபட்டிருந்தார்.

### நேமிநாதன் இல்லத்திலும் கறுப்புக்கொடி!

மே 21 — குடியரசு பகிஷ்கரிப்பு நாளன்று வழமை போல தம்முடைய இல்லத்திலும் கறுப்புக்கொடியைப் பறக்கவிட்டிருந்ததாக திருகோணமலை பா. உ. திரு.பா. நேமிநாதனும், திருகோணமலையில் குடியரசு ஹர்த்தாலையொட்டி திருகோணமலையில் கைதுசெய்யப்பட்ட 6 இளைஞர்களை பிணையெடுத்தவர் தாமேதான் என்று திரு. கமலநேசனும் சுதந்திரன் ஆசிரியரிடம் தெரிவித்துள்ளனர்.

### ஊமையென்றாலும் உணர்ச்சி குறையுமா?

நாற்பத்தைந்து மதிக்கத்தக்க ஒருவர் சட்ட மறுப்பு போராட்ட நாளன்று கூட்டணிக் காரியாலயத்துள் அங்கு மிங்குமாக ஓடியாடித் திரிந்தார். அவர் எதற்காக அப்படித்திரிகிறார் என வினவிய போது வவுனியா பிரதி

—3-ம் பக்கம் பார்க்க

## பொலிசாரின் கண் எதிரிலேயே வீர இளைஞர்கள் நடத்திய சட்டமறுப்பு ஊர்வலம்!

22-5-75 தமிழர் கூட்டணி நடாத்தவிருந்த சட்டமறுப்பு ஊர்வலம் 2மணியளவில் பொலிசாரினால் முக்கிய பாதைகள் அனைத்திலும் முட்கம்பி வேலிபோட்டுத் தடுக்கப்பட்டது.

தமிழர் கூட்டணியினர் தமது காரியாலயத்திலிருந்து புறப்பட இருந்த ஊர்வலம் தடைசெய்யப்பட்டதும் தலைவர்களும் தொண்டர்களும் யாழ் பிரதான வீதியில் இருந்து சத்தியாக்கிரகம் செய்தனர். தடையை மீறிப்பலர் சத்தியாக்கிரகிகளுக்கு மத்தியில் பேசிக்கொண்டிருந்தனர்.

சுமார் 2.30 அளவில் காரியாலயத்திற்கு மேற்குப்புறமாக பல ஆயிரம் வாலிபர்கள் நின்று கொண்டிருந்தனர். அப்போது ஏராளமான பொலிசாரும் வீதி ஓரங்களில் நின்றனர். வாலிபர்கள், தலைவர் செல்வா வாழ்க! குடியரசை எதிர்ப்போம் குண்டாந்தடிக்கு அஞ்சமாட்டோம், துப்பாக்கிக்கும் அஞ்சமாட்டோம். என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த பொலிசார் வீதி ஓரங்களில் நிற்குமாறு கேட்டுக்கொண்டனர். ஆனால் வாலிபர்கள் பிரதான வீதியில் நின்று கோஷமிட்டபடி இருந்தனர். முட்கம்பி வேலிக்குள் இருக்கும் தலைவர்களின் கட்டளைக்கு அவர்கள் காத்திருந்தனர்.

பல ஆயிரமாகத் திரண்ட வாலிபர்களில் ஒருவர் வேறோர் பாதையினால் காரியாலயத்திற்குள் செல்வோம் என்று கூறி வாலிபர்களை அழைத்தார். அப்போது வாலிபர்கள ஒன்றுதிரண்டு சுமார் ஆயிரம் பேர்வரை அர்ச்பிலோமினா அச்சகத்திற்கு எதிராக செல்லும் வீதியால் ஊர்வலமொன்றை நடாத்திச்சென்றனர்.

ஊர்வலத்தில் துரோகிகள் ஒழிக! துப்பாக்கிக்கு அஞ்சோம்! தமிழ் ஈழம் அமைப்போம்! வாழ்க செல்வா! என்று கோஷமெழுப்பிப் பெரும் ஆர்ப்பாட்டத்தைச் செய்துகொண்டு சென்றனர். அவர்கள் வடக்குப்புற வீதியில் சென்றுகொண்டிருந்தபோது பொலிசார் பகுதி பகுதியாக நின்று கொண்டிருந்தனர். இரு பொலிசார் மோட்டார் சயிக்கிளில் அங்கு மிங்குமாகத் திரிந்தனர். வடக்கு நோக்கிச் சென்ற ஊர்வலம் பின்னர் கிழக்கு வீதியால் திரும்பி காரியாலயத்தை அண்மித்தது.

அப்போது வாலிபர்கள் உள்ளேசெல்ல அனுமதிக்கப்படவில்லை. சாவகச்சேரி தே. பே. உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் பொலிசாருடன் பேசி அவ்வாலிபர்களை சத்தியாக்கிரகம் நடைபெற்ற இடத்திற்கு அழைத்துச்சென்றார்.

உணர்ச்சிவசப்பட்ட வாலிபர்கள் இவ்வாறு பொலிசாரின் அடக்குமுறைக்கு அஞ்சாது, அவர்கள் எதிரிலேயே குடியரசுக்கு எதிரான கோஷமெழுப்பி சட்டமறுப்பு ஊர்வலம் ஒன்றை நடாத்தி முடித்தனர்.

—அப்பலோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சுயாட்சி கோரிக்கை மறுக்கப்பட்டதால்தான் ஈழத் தமிழர்கள் சுதந்திரம் கோருகின்றனர்

## குடியரசு நாளை துக்கநாளாக அவர்கள் கொண்டாடியது மெத்தச் சரி!”

தமிழக சட்டமன்றமேலவைத் தலைவரும் தமிழரசுக் கழகத்தலைவருமான சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் ‘இலங்கைத தமிழரின் துக்கம்’ என்ற தலைப்பில் தமது ‘செங்கோல்’ இதழில் அண்மையில் (25-5-75) ஆணித்தரமான தலையங்கம் ஒன்றைத் தீட்டியிருந்தார். அது முழுவதையும் அப்படியே சுதந்திரன் வாசகர்களுக்காக கீழே தருகிறோம்.



### ம பொ.சி.யின் ஆசிரியத் தலையங்கம்!

இலங்கை அரசு, மே 22 அன்று குடியரசு நாளைக் கொண்டாடியது. ஆம், அந்த நாளில்தான் இலங்கையின் குடியரசுச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. ஆகவே, அந்த நாளைத் திருநாளாகக் கொண்டாட இலங்கை அரசு திட்டமிட்டால், அதிலே குற்றமிருப்பதற்கில்லை. ஆனால், இலங்கையில் நடைமுறையிலுள்ள குடியரசுச் சட்டமானது, அந்த நாட்டிலுள்ள 30 லட்சம் தமிழ் இனத்தவரின் அங்கீகாரத்தைப்பெற்றதல்ல. அதனால், குடியரசு நாளை துக்க தினமாகக்கொண்டாடியிருக்கின்றனர் இலங்கைத் தமிழர்.

இது, இலங்கை அரசுக்குப் பிடிக்கவில்லை. அதனால், தமிழருக்கு எதிராக அடக்குமுறைக் கரடியைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. தமிழர் மிகுதியாக வாழும் பகுதிகளில் சிங்களப் பொலிஸ் படைகளை நிறுத்தி வைத்துள்ளது. திட்டமிட்டபடி, கடையடைப்பு நடத்தி வீடுகள் மீதும் கடைகள் மீதும் கருப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு தமிழர் தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

துக்கநாள் கொண்டாடுமாறு மக்களைக் கோரும் துண்டுப் பிரசுரங்களை வழங்கியதற்காகத் திரு. காசி ஆனந்தன் உள்ளிட்ட இளைஞர் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இளைஞர் காசி ஆனந்தன், ஏற்கெனவே இரண்டாண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டு, அண்மையில்தான் விடுதலையானார். இலங்கைத் தமிழர் அனைவருடைய இதயங்களிலும் இடம் பெற்ற அந்தத் தமிழ் வீரரை அரசு திரும்பவும் சிறையில் அடைத்திருப்பது கொடுமையினும் கொடுமையாகும்.

இலங்கை வாழ் தமிழரிலே சரிபாதியினர்க்குக் குடியுரிமை வழங்கப்படவில்லை — குறிப்பாக, மலைப்பிரதேசங்களில் வாழும் இந்திய வமிசாவளித் தமிழருக்குக் குடியுரிமை மறுக்கப்படுகிறது. இந்த நிலையில், அவர்கள் சிங்களவருடன் சேர்ந்து கொண்டு குடியரசு நாளைக் கோலாகலமாகக் கொண்டாட முடியுமா?

இலங்கையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இரு மாநிலங்களில் தமிழர் மிகுதியாக வாழ்கின்றனர். தொடர்ந்தாற் போலுள்ள இந்த மாநிலங்களை சுயாட்சியுள்ள — இலங்கைக் குடியரசுக்குட்பட்ட—ஒரு மாநிலமாகச் செய்ய வேண்டுமென்று தமிழர் ஐக்கிய முன்னணி கோரிவந்தது. அந்தக்கோரிக்கையை நிராகரித்து விட்டு, அரசியல் நிர்ணய மன்றத்தில் தங்களுக்கிருந்த பெரும்பான்மை பலத்தைக்கொண்டு குடியரசுச் சட்டத்தை நிறைவேற்றி, அதனை நடைமுறைப்படுத்தினர் சிங்களத் தலைவர்கள்.

இத்துடனன்றி, இலங்கையின் ஆட்சிமொழியாக சிங்களத்தோடு தமிழையும் சமநிலையில் அங்கீகரிக்க வேண்டுமென்றும் பூர்வ குடித் தமிழர்கள் கோரினர். இந்தக்கோரிக்கையையும் ஏற்க மறுத்து, சிங்களமொன்றையே இலங்கையின் ஆட்சி மொழியாக்கி குடியரசுச் சட்டத்தை நிறைவேற்றினர் சிங்கள ஆதிக்கவாதிகள்.

ஆம்; இலங்கையில் நடைமுறையிலுள்ள குடியரசுச் சட்டம் தமிழரை அந்த நாட்டிற்கு அந்நியராக்கி விட்டது. சிங்களவரோடு சம பங்காளிகளாக்கவில்லை. சுருங்கச்சொன்னால், பெரும்பான்மையினரான சிங்களவருக்கு சிறுபான்மையினரான தமிழரை அடிமைப்படுத்தியிருக்கிறது.

இந்த நிலையில், தமிழர் குடியரசுச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாளைவிழாக் கொண்டாடுவது சாத்தியமா? அப்படிச்செய்வது, உதைத்த காலுக்கு முத்தமிடும் அடிமைப் புத்தியாகும். தன்மானமுள்ள தமிழினத்தாரிடம் அதை எதிர்பார்க்க முடியாதுதானே!

இலங்கைத் தமிழர்கள், குடியரசு நாளிலே துக்கங் கொண்டாடியது சரிதான். இந்தியத் தமிழர் அனைவருமே இலங்கைத் தமிழரின் தன்மானச் செயலை வரவேற்கின்றனர்.

இலங்கை அரசு, தமிழ் இனத்தாருக்குப் பிரதிநிதித்துவம் பெற்றதல்ல. அது, சிங்கள இனத்தவரின் ஆதிக்கப் பாசறைதான்! அதை எதிர்த்துப்போராடுவது தமிழினத்தாரின் பிறவிக் கடமையாகும்.

சிறைப்படுத்தப் பட்டுள்ள திரு. காசி ஆனந்தனுக்கும் மற்றவர்களுக்கும் நம்முடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இலங்கையில் தமிழர் மிகுதியாகவுள்ள மாநிலங்களை இணைத்துச் சுதந்திரமுள்ள தனியரசு நாடாகச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கைக்கு இளைஞர்களிடையே ஆதரவு வலுத்து வருகின்றது நேற்றுவரை மாநில சுயாட்சி போதுமென்று முதியோருப சுதந்திர நாடு கோரிக்கைக்கு ஆதரவாக மனமாற்றம் அடைந்து வருகின்றனர்.

இது, நாம் புரிந்துகொள்ளக் கூடியதுதான். சுயாட்சிக் கோரிக்கையை சிங்களவர்கள் ஏற்றிருந்தால், சுதந்திரத் தமிழ் நாடு கோரிக்கை பிறந்திருக்காது. சுயாட்சி மறுக்கப்படுமிடத்தில், சுதந்திரம்தான் பிறக்கும்.

இந்தியாவை பிரிட்டிஷார் ஆண்ட காலத்திலே, காலத்தோடு முஸ்லிம்கள் பெருவாரியாகவுள்ள மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கியிருந்தால், சுதந்திர பாகிஸ்தான் கோரிக்கை பிறந்திருக்காது. காங்கிரஸ் இழைத்த தவறின் விளைவாக 1947 ஆகஸ்டுப் பதினைந்தில் பாரததேசம் துண்டாடப்பட்டது.

அதுபோல, பாகிஸ்தான் ஆட்சியினர் கிழக்கு வங்கத்துக்கு மாநில சுயாட்சி வழங்கியிருந்தால், சுதந்திர வங்கம் தோன்றியிருக்காது. பாகிஸ்தானை ஆளுவோரின் ஆதிக்கவெறியால் கிழக்கு வங்க மாநிலம் மறைந்து சுதந்திர வங்கதேசம் பிறந்தது.

வரலாறு காட்டும் இந்த உண்மைகளை இலங்கையை ஆளுவோர் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இலங்கை, இந்தியாவின் அண்டை நாடு—குறிப்பாக, இந்தியத் தமிழகத்திற்கு நெருக்கமாகவுள்ள நாடு. ஆகவே, அந்த நாடு பலமுள்ளதாக இருப்பதையே இந்தியா விரும்புகிறது. ஆனால் இலங்கையின் பலம் என்பது, சிங்களவர் ஆதிக்கம் அல்ல; தமிழரும் உள்ளிட்ட இலங்கை மக்கள் அனைவருடைய ஒருமைப்பாடாகும். இலங்கை வாழ் தமிழர்—ஆம்; இந்திய வமிசாவளித் தமிழரையும் சேர்த்து — சிங்களவரோடு ஒன்றுபட்டால்தான் இலங்கை பாதுகாப்பாக வாழமுடியும். பிரதமர் பண்டாரநாயகா இந்த உண்மையை உணரும் நாள் எந்நாளோ?



சட்டமறுப்பு போர்க்களத்தில் தமிழர் தந்தை [illegible] கழும் அமர்ந்திருக்கும் காட்சி!

### ஊமையென்றாலும் . . .

—2-ம் பக்கத் தொடர்

நிதியைக் காண ஆவலாக இருப்பதாக எழுதிக் காட்டினார்.

அப்போது தான் அவர் வாய் பேச மாட்டாதவர் என்பது தெரிய வந்தது. அவர்பற்றி அறிய ஆவலானேன்.

கடந்த வருட குடியரசு தினத்தின் போது கறுப்புக் கொடி கட்டியதற்காக மாங்குளத்தில் பொலீசாரின் அடிக்கு ஆளானவர் அவர் என்பது தெரிய வந்தது. அத்துடன், அவர் தமிழரசுக் கட்சியின் பகிஷ்கரிப்பு, வைபவங்களின் போது மாங்குளப்பகுதியில் முக்கிய இடம் வகித்தவர் என்பதும் தெரிய வந்தது. தமிழரசுக் கட்சியினர் யாழ் கச்சேரி முன் நடாத்திய சத்தியாக்கிரகத்தின் போதும் அதில் வந்து கலந்து கொண்டவர் இவர்.

அன்று அவர் பொலீசார் போட்டிருந்த தடையைத் தான் தாண்ட வேண்டுமென்றும் அதற்கு அனுமதி பெறவே, தே. பே. உறுப்பினர் செல்லத்தம்புவைக் காண விரும்புவதாகவும் தெரிவித்தார்.

பிரதான வீதியில் இருந்த சத்தியாக்கிரகம் மட்டும் போதாது தடையைத் தாண்டவேண்டும் என்ற தணியாத ஆவலுடன் அவர் அன்று அங்கு காணப்பட்டார்.

ஈற்றில் அவர் பிரதான வீதியில் இருநத சத்தியாக்கிரகிகளுடன் சேர்த்திருந்து தமது பங்கைச் செலுத்தி மனச்சாந்தி பெற்றார். மாங்குளத்தில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தராக இவர் கட்சியின் ஆரம்ப காலத்திலிருந்தே விளங்கி வருகின்றார்.

— அப்பலோ

### காரைதீவின் வீர இளைஞர்கள்

தமிழ் ஈழத்தின் கிழைத்தேன் கோடிக் கிராமங்களில் ஒன்றான காரைதீவில் குடியரசு எதிர்ப்பு ஹர்த்தால் வெற்றிகரமாக நிறைவேறியது குறித்து அவ்வூரின் வீர இளைஞர்களான திரு. வி. கமலநாதன், பொன்னம்பலநாதன், இராமகிருஷ்ணன். யோகராஜா சோமநாதன் ஆகியோர் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்றவன் நீ!

தம்பி சிவா...! தமிழ்ஈழத்தின் விடுதலைக்கு களபலியாக உன்னையே தந்திட்ட என்ன ருமைக் கண்மணியே!

விளையாட்டாக ஓர் ஆண்டு ஓடி மறைந்து விட்டது—உன்னைப் பிரிந்து!

காலன் எனும் கொடியோன் எங்களிட மிருந்து உன்னைப் பிரித்து 365 நீண்ட நாட்கள் கழிந்து சென்றுவிட்டன!

காலதேவன் உன்னை எங்களிடமிருந்து பிரித்தெடுத்துவிட்டதாகவா கூறினேன்?

நான் ஒரு மடையன்!

காலத்தால் அழியக்கூடியவனா நீ!

காலத்தையே வென்றவனல்லவா நீ!

உன் களங்கமற்ற அந்தச் சிரிப்பு இதோ என் கண் முன்னே தெரிகிறது!

அதிலே நான் மயங்கிப் போகிறேன்!

உன் வீரம் சொட்டும் முகம் — அந்த முகத்திலே காணப்படும் தீட்சண்யம்—விரிந்த மார்பு — தடந்தோள்கள் — பாசம் நிறைந்த தூய்மையான இதயம் — அதிலே பொங்கி யெழும் விடுதலை உணர்வு—துரோகிகள் கண்டு நடுங்கும் உன் தூயமேனி—இவற்றையெல் லாம் நான் காண்கிறேன்! உள்ளம் சிலிர்த்துப் போகிறேன்!

காலனால் உன்னை எங்களிடமிருந்து பிரித்து விடமுடியவில்லை!

அவனால் செய்யமுடிந்ததெல்லாம்— உன்னை ஒவ்வொரு தமிழ் இதயத்திலும் தெய்வமாகப் பிரதிட்டை செய்ததுதான்!

யுத்தகளத்தில் வீர மரணத்தை தழுவிக் கொள்ளும் வாய்ப்பு சுத்த வீரர்களுக்கு மட் டுமே கிடைக்கின்ற வாய்ப்பு ஆகும்!

உனக்கு அப்படியொரு வாய்ப்பைத்தந்த காலதேவன்—நீ ஒரு சுத்த வீரன் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டிவிட்டான்!

தம்பி சிவா... நீ ஒருசுத்த வீரன் மட்டுமா?

வீரம் விலை போகாது—விவேகம் துணைக்கு வராவிட்டால் என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தவன் நீ!

அரசியலில்—விடுதலை இயக்கத்தில்—தெளி வான சிந்தனையும் தீர்க்கமான முடிவுகளும் கொண்டிருந்தவன் நீ!

சுதந்திரனில் நான் எழுதும் அரசியல் மடலை வெகுவாகப் பாராட்டி உன்கைப்பட எத்தனை கடிதங்களை நீ எனக்கு எழுதியிருக் கிறாய்!

என்னை உனக்கு அப்போதெல்லாம் நேரடி யாகத் தெரியாவிட்டாலும் அண்ணா அண்ணா என்று பாசத்தைக் கொட்டி — என்னுடைய கருத்துக்களுக்கு புகழ்மாலை சூட்டி — நீ எனக்கு எழுதிய கடிதங்கள் தாம் எத்தனை எத்தனை!

'சிறைப்பறவை' என்கிறபெயரில் மறைந்து கொண்டு நீ எனக்கு எழுதிய கருத்துக்கள் தாம் எத்தனை எத்தனை?

தமிழர் கூட்டணி பின்பற்றும் அஹிம்சைப் பாதையில் அறவே நம்பிக்கையற்றவன் நீ!

அடக்கு முறையை ஆயுதத்தால் மட்டுமே சந்திக்க முடியும் என்பது உனது தீர்க்கமான கருத்து!

ஆனால் அதற்காக — அஹிம்சை வழியிற் செல்லும் தமிழர் கூட்டணியை வைது திரி வதையும் கிண்டல் செய்வதையுமே உன் இலட்சியமாகக் கொண்டிருந்தவனல்ல நீ!

தமிழர் கூட்டணித் தலைமையின் தீவிர மின்மையும் மந்தப் போக்கும் கண்டு உன் உள்ளம் கொதித்துக் கிடந்தது எனக்குத் தெரியும்!

ஆனால் அதறகாக 'தமிழர் கூட்டணி' எனும் அமைப்பையே உடைத்தெறிய வேண் டும் — தமிழர் கூட்டணிக்கு போட்டியாக மற்றோர் விடுதலை இயக்கம் தொடங்கப்பட வேண்டும் என்று செயற்பட்டவனல்ல நீ!

தமிழர் கூட்டணியின் இலட்சியத் தூய் மையை என்றைக்கும் சந்தேகித்தவனல்ல நீ!

தமிழர் கூட்டணி தன்னுடைய பாதை யில் தமிழ்ஈழ விடுதலையை நோக்கி முன்னே றட்டும் — நான் என்னுடைய பாதையில் முன்னேறுகிறேன் என்று யாரையும் திட்டிக் கொண்டிராமல் உன்பலத்தில் — உன்பாட்டில் உன் வழியிற் செயற்பட்டவன் நீ!

அதே வேளையில் தமிழர் கூட்டணியின் உதயசூரியன் கொடியே தமிழ் ஈழத்தின் ஒரே யொரு தேசியக்கொடி என்பதை ஏற்றுக் கொண்டிருந்தவன் நீ!

தமிழர் கூட்டணியின் 'வாழ்க ஈழத்தமிழ கம்' எனும் தேசிய கீதமே தமிழ் ஈழத்தின் தேசிய கீதம் என்பதை ஒப்புக்கொண்டிருந் தவன் நீ!

உதயசூரியன் கொடியை உனது வீட்டில் ஏற்றி வைத்தவன் நீ!

ஒவ்வொரு நாள் காலையும் 'வாழ்க ஈழத் தமிழகம்' எனும் தேசிய கீதத்தைப் பாடிய படி உதயசூரியன் கொடியை மும் முறை வலம் வந்து வணக்கம் செய்ய வேண்டுமென உனது அக்காள் பிள்ளைக்கு உயில் எழுதிவைத்து விட்டுச் சென்றவன் நீ!

இந்திய சுதந்திரப்போராட்டத்தின்போது —சுபாஸ் சந்திரபோஸ்—மகாத்மா காந்தியின் அஹிம்சைப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் காந்தியாரின் இலட்சிய சுத் தியை என்றைக்குமே சந்தேகித்ததில்லை!

அதுபோலவே—தந்தை செல்வாவின் அற வழிப்போராட்ட முறையை நீ ஏற்க மறுத் தாலும்—மூதறிஞர் தந்தை செல்வாவின் தலை மையையும் ஈடிணையற்ற அவரது தியாகத்தை யும் என்றைக்கும் நீ மதிக்கத் தவறியவன் அல்ல!

உனது அரசியல் ஞானத்துக்கும் விவேகத் துக்கும் மற்றோர் எடுத்துக்காட்டு—

அச்சமயத்தில் சிறைச்சாலையிலிருந்த படியே எனக்கு நீ ஒரு கடிதம் எழுதினாய்!

குடியரசு நாளில் கைதுசெய்யப்பட்டு சிறையிலிருந்த தமிழ் இளைஞர்களுடன் கலந்து பேசியதாகவும், அவர்கள் அத்தனைபேரும் தமி ழர் கூட்டணியினர் தேசிய அரசப்பேரவைக்கு செல்லத்தான் வேண்டும் என்று முடிவுசெய் துள்ளதாகவும் இதை சுதந்திரனில் பிரசுரிக் கும்படியும் நீ எழுதியிருந்தாய்!

தமிழ் மாணவர் பேரவை சார்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக நீ எழுதியிருந்தாய்!

உனது இந்த முடிவு — ஆழமான உனது அரசியல் அறிவையும், தீர்க்கமான சிந்தனை யையும் எடுத்துக்காட்டியது மட்டுமன்றி— பிரச்சினைக்கும் முற்றுப்புள்ளி வைத்தது!

துணிவு

வீரம்

ஆழமான இலட்சியப்பற்று

தெளிவான சிந்தனை

பொறுப்புணர்வு


போன்ற இத்தனை பண்புகளும் மொத்த மாக உன்னிடம் நிறைந்திருந்தன!

நீ மறைந்து ஓராண்டு ஆகியும் உன்னைப் போல ஒருவனை நான் இன்னும் சந்தித்த தில்லை!

நீயொரு தனிப்பிறவி! தியாகச்சுடர்! தீந் தமிழர் தெய்வம்! திராவிடத்தின் ஒளிக்கற்றை!

உன் பெயரை உச்சரிப்பதற்கே மற்றவர் கள் அஞ்சிக்கிடந்த நேரத்தில்—உன் ஆற்றலை, திறனை, தியாக வீரத்தை — உலகமடங்கும் என் பேனாவே அறியச் செய்தது!

உலகத் தமிழ் மாநாட்டு நேரத்தில்— தொண்டனாகப் பணியாற்றிய நீ — அண்ணா



1972ம் ஆண்டு புதிய குடியரசு அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்ட நேரம் — அதை எதிர்த்து தமிழ் ஈழம் முழுவதும் பொங்கியெ ழுந்த நாட்கள்!

அப்போது நீ யாழ்ப்பாணம் சிறைச்சாலை யில் இருந்தாய்!

வெளியே பிரச்சினைக்குரிய ஒரு விவாதம் நடந்துகொண்டிருந்தது.

தேசிய அரசப்பேரவைக்கு தமிழர் கூட் டணி பா. உ.க்கள் போவதா அல்லது அதை முற்றாக பகிஷ்கரிப்பதா என்பதே அன்று எழுந்த சூடான பிரச்சினையாகும்!

தீவிர உணர்ச்சி மட்டுமேயுள்ள சிந்தனைத் திறனற்ற தமிழ் இளைஞர்கள் — தேசிய பேர வைக்கு தமிழர் கூட்டணியினர் செல்லக் கூடாது என்கிற கருத்தையே ஆதரித்து நின்ற னர்!

தமிழ் விடுதலை இயக்கத்தின் எதிரிகள் இதுதான் சமயமென்று குட்டை குழப்ப முனைந்தனர்!

கோப்பி குடியுங்கள், சிற்றுண்டி சாப்பிடுங்கள், என்று என்னையும் என் துணைவியாரையும் பாசத் துடன் உபசரித்த அந்தப் பாங்கை இப்போது நினைத்தாலும் கண்கள் குளமாகின்றன!

தம்பி சிவா! உரும்பராய் வேம்பன்மயா னத்தில் இருந்துகொண்டு — உணர்ச்சியற்று ஜடமாகக் கிடக்கும் தமிழனைத் தட்டியெழுப் பிக்கொண்டிருக்கும் விடுதலைப் பேரூற்றே!

உன் இலட்சியம் கைகூட — தமிழ் ஈழம் விடுதலை பெற்றிட—எம்மை நாம் அர்ப்பணிப் போம்! இது சத்தியம்! சத்தியம்!!

உன்னைப்போன்ற வீர இளைஞர்கள் நம் விடுதலை இயக்கத்தில் வெடித்துக் கிளம்பட் டும்!

காவல் தெய்வமாக நீ இருந்து தமிழ் ஈழத்தைக் காப்பாற்று தம்பி...!

உன் அண்ணன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் மக்கள் கொடுத்தனர் சூடு!

## மானம்கெட்ட மாடு பட்டது பாடு!

மட்டக்களப்பில் குடியரசு தினத்துக்கு முன்னரும் பின்னரும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் தமிழ் மக்களின் மானஉணர்ச்சியை எடுத்துக் காட்டும் வீர நிகழ்ச்சிகளாய் அமைந்துவிட்டன. தமிழ் ஈழ விடுதலைப் போரில் தாம் பின்னிற்கப்போவதில்லை என்பதை தேனுடு வாழ் தமிழ் மக்கள் தெளிவுற எடுத்துக் காட்டி விட்டனர். மட்டக்களப்பில் எழுந்த பேரெழுச்சி கண்டு அரசாங்கத்தின் அடிவருடிகள் பட்டபாடு கொஞ்சமல்ல துரோகிகளின் மட்டக்களப்புப் பிராந்தியத்தின் தலைவரான ஒரு மகாராஜ மாடு வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடிய ஓட்டம் — கடவுளே இன்று நினைக்கவும் சிரிப்பாக இருக்கிறது.

### ஐயோ பாவம்

குடியரசு தினத்துக்கு மூன்று நாட்களுக்கு முதல் மட்டக்களப்பு நகரை ஒட்டிய நாவற்குடாவில் மகாராஜ மாட்டுக்கு உள்ளூர் எட்டப்பர்கள் கூடி ஒரு வரவேற்புக் கொடுத்தார்கள். மகாராஜ மாடு மேடையில் கம்பீரமாக வீற்றிருந்தது. மேடையில் நீலக்கொடிகள் பறந்து கொண்டிருந்தன. மகாராஜமாட்டைப்பாராட்டிப் பேசுவதற்காக நாவற்குடாவைச் சேர்ந்த செபமாலை என்னும் இளைப்பாறிய ஆசிரியரை அழைத்தார்கள், செபமாலை ஆசிரியர் பேசத் தொடங்கினர்.

"பண்டார நாயக்காதான் தமிழருக்கு அள்ளி வைத்தவன் தமிழரசுக்கட்சி இல்லை என்றால் இதுவரை தமிழினம் அழிந்து போயிருக்கும்" இப்படி எதிர்பாராத விதமாக ஆசிரியர் பேசியதும் மகாராஜமாடு அவரை மருண்டு பார்த்தது. செபமாலை ஆசிரியர் அசையவில்லை நீலக் கொடி மேடையில் அவர் தொடர்ந்து தமிழர் கூட்டணியை பாராட்டிக்கொண்டிருந்தார். தன்னுடைய கருத்துக்களைக் கூறி முடித்துக் கொண்ட பின்னரே அவர் உட்கார்ந்தார்.

நாவற்குடாவில் மகாராஜ மாட்டினுடைய மானம் இப்படி பகிரங்கத்தில் ஏலம் போன கதையைக்கேட்டு இன்று ஊரெல்லாம் ஒரே சிரிப்பாய்ச்சிரிக்கிறது.

### சிறையில் 13 பேர்

கவிஞர் காசி ஆனந்தன் கைதானதும் உணர்ச்சி கொந்தளித்து வெடித்தது. கல்குடாவில், காசியை விடுதலை செய், குடியரசு தினத்தை பகிஷ்கரிப்போம் தமிழ் ஈழம் தமிழர் தாகம் என்றெல்லாம் தெருத்தெருவாக எழுதிய மூன்று இளைஞர்கள் கைதானர்கள். கறுப்புக்கொடியை பறக்க விட முயன்ற காரணத்துக்காக கல்முனை காரைதீவு பகுதிகளில் இரு இளைஞர்கள் கைதானர்கள். மட்டுநகரில் நீலக்கொடியை அறுத்தெறிய முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒரு இளைஞர் கைதானர் அனைவரும் மட்டக்களப்புச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

சிறைவாசம் அனுபவித்த வீரர்கள் பட்டியல் இது.

1. காசி ஆனந்தன், சந்திரன், அன்ரன், ரெத்தினம், ரமணன் சந்திரமோகன், சுசமுத்து, செல்வேந்திரன், குமாரதாசன், பத்மநாதன், கல்கி, சித்தானக்குட்டி, ஸ்ரீபன்.

### மாணவிகளின் பேரெழுச்சி!

ஒரு மாணவிகள் கல்லூரியில் கரும்பலகையிலும் சுவரிலும் மாணவிகளே குடியரசு எதிர்ப்புச் சுலோகங்களை எழுதினர்கள். இதனல் மேற்படி கல்லூரி நிர்வாகத்தின் விசாரணைக்கு இம்மாணவிகள் உட்படுத்தப்பட்டார்கள்.

### இளைஞரின் எழுச்சிப் போர்!

மட்டக்களப்பு அரசினர் கல்லூரி மாணவர்கள் பாடசாலையை முற்ருகப் பகிஷ்கரித்தனர். மட்டக்களப்பு மகாராஜமாடு சண்டித்தனக்குஞ்சுகளோடு சென்று இக்கல்லூரி மாணவர்களில் ஒருவரை முதல்நாள் உதைத்துத்தள்ளியதால் இக்கல்லூரி மாணவர்கள் மிகவும் ஆவேசத்தோடு கல்லூரி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டார்கள்.

சிவானந்தா மகாவித்தியாலயத்தில் மகாராஜ மாட்டின் கையாளாக இருக்கும் றவுடி வாத்தி நள்ளிரவில் யாரோ சில இனந்தெரியாத இளைஞர்களால் முறையாக நையப் புடைக்கப்பட்டார். ஆரையம்பதி மகாவித்தியாலயத்தின் கரும்பலகைகளில் இருந்த எழுத்துக்களை அழிப்பதற்கு தச்சுத்தொழிலாளர் அழைக்கப்பட்டு சீவுழி போட்டுச் சீவும் நிலை கல்லூரி நிர்வாகத்துக்கு ஏற்பட்டது. மத்திய கல்லூரியில் சில வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

### நீலக்கொடிக்கு நெருப்பு

மட்டக்களப்பு நகரில் உள்ள கடைகளை 21ம் திகதி காலையில் போய் ராஜமாடும் சண்டிக்குஞ்சுகளும் பொலிசாரின் உதவியோடு வலுக்கட்டாயமாக திறந்து வைத்தன. நீலக் கொடிகளை கடைச் சொந்தக்காரரிடம் கொடுத்து கட்டாயம் அவற்றைப் பறக்கவிட வேண்டும் என்றும் கடைமுதலாளிகள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

ராஜ மாட்டின் விட்டிற்கப் பக்கத்திலுள்ள ஒரு கடையிலேயே துடிப்புமிக்க ஒரு சில இளைஞர்கள் புகுந்து நீலக் கொடியைக் கழற்றி நெருப்பு வைத்து எரித்தார்கள். மத்திய வீதியில் உள்ள ஒரு தமிழர் கடையில் மாணவர்கள் சிலர் நீலக்கொடியை அறுக்கச் சென்றபோது முதலாளி இப்படிச் சொன்ஞர். 'தம்பி உங்களைக் கடவுளாகப் பார்த்து அனுப்பியிருக்கிருர். தயவு செய்து இதை அறுத்துக்கொண்டு போங்கள் இது சண்டித்தனத்தால் ஏற்பட்ட கொடி".

### அரங்கு குரங்காக மாறியது

ஏழைகளின் பெயரில் அமைத்த பாட்டாளி புரத்தை ஒரு பணக்காரரின் பெயராக ராஜன் அரங்கு என்று அரசாங்கம் சமீபத்தில் மாற்றியது. பாட்டாளிபுரத்தில் ஒரு சிறுமேடை கட்டப்பட்டு அதற்கு ராஜன் அரங்கு என்று மைத்திரிபால சேனநாயக்கா சூட்டினர்.

குடியரசு தினக் கொந்தளிப்பில் உணர்ச்சிவசப்பட்ட தமிழ் மக்கள் மையினல் அரங்கை குரங்கு என்று மாற்றிஎழுதினர்கள், ராஜன் அரங்குமாறி 'ராஜன்குரங்கு' காட்சி அளித்தது.

### மாட்டுக்குக் கிடைத்த மரியாதை

மகாராஜ மாடு சண்டிக் குஞ்சுகளோடு எவ்வளவு தான் துள்ளியபோதும்மாட்டுக்கு உரிய பதிலடிதர மக்கள் தவறவில்லை. செங்கலடியில் குடியரசு தினவிழாவுக்கு ஒலிபெருக்கி விளம்பரம் செய்யப்போன மகாராஜ மாட்டினுடைய ஜீப்வண்டி கிராம மக்களால் வழிமறித்துத் திருப்பியனுப்பப்பட்டது.

மகாராஜ மாடு நடத்திய கலை நிகழ்ச்சிக்கு ஆட்களை ஏற்றிப் பறிக்கப் போன கடதாசிக் கூட்டுத்தாபன லொறிகளுக்கு கிரான்குளப் பகுதியில் முறையான கல்வீச்சு நடந்ததாகவும் பேசிக் கொள்கிருர்கள்.

### ஆடினர் ஆட்டம் ஓடினர் ஓட்டம்

மட்டக்களப்பு சண்டியன் குஞ்சுகளோடு பண்ணுத அட்டகாசங்களெல்லாம் பண்ணிப்பார்த்த மகாராஜ மாடு குடியரசு தினம்முடிந்து மறுநாள் சிறைச்சாலையில் இருந்து கவிஞர் காசி ஆனந்தன் சிங்கம் போல் வெளியே வந்ததும் மட்டக்களப்பை விட்டு ஓட்டம் பிடித்தது. இப்பொழுது மகாராஜமாடு கொழும்பில் மருத்துவவிடுதி ஒன்றில் தங்கி இருப்பதாக தெரிய வருகிறது. குடியரசு தினத்தில் மட்டக்களப்பு மக்கள் கொடுத்த சூடு — பாவம் இப்போது கொழும்பில் நோயோடு கிடந்து அழுகிறதாம் மாடு.

---

**அமரர் நாமம் வாழ்க!**



காவலூர் மக்களின் நெஞ்சங்கவர்ந்த தலைவரும்—தந்தை செல்வாவின் விடுதலைப் படையில் தம்மையும் இணைத்துக்கொண்டு தமிழினத்துக்கு அருந் தொண்டு ஆற்றிய பெருந்தலைவர்களில் ஒருவருமான அமரர் வீ. ஏ. கந்தையா அவர்களின் நினைவு நாள் யூன் 4ம் திகதியாகும். கடமை கண்ணியம், கட்டுப்பாடு தவருது தமிழ் ஈழ விடுதலைப் படையின் முன்னணித்தளபதியாயிருந்து கறுப்பு கொடிப் போராட்டத்தின்போது பொலிசாரின் குண்டாந்தடிக்கு தம்மைப் பலிதந்து அமரராகிவிட்ட அந்தப் பெரியாரின் வழியில் தமிழினம் தொடர்ந்து செல்ல உறுதியெடுக்குமாக! வாழ்க அமரரின் நாமம்!

---

### காசி ஆனந்தனுக்கு வரவேற்பு விழா!

தலைமை: திரு. வே. செல்லையா,

வரவேற்புரை: கவிஞர் செ. குணரத்தினம்,

இடம்: மட்டிக்களி கதிரொளி விளையாட்டு மைதானம், அமிர்தகளி.

காலம்: 14—6—75 சனிக்கிழமை.

சொற்பொழிவாற்றுவோர்: தமிழர் கூட்டணிப் பிரமுகர்கள்.

அமிர்தகளி, புன்னைச்சோலை, மட்டிக்களி பாலநதி மக்கள் சார்பில் இவ்வரவேற்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

---


**வாங்கி விட்டீர்களா?**

- காசி ஆனந்தனின் 'சிறைச்சாலை இனிக்கும்'
- காசி, சுரதா, கருணாநிதி கவிதைகள்—
- 4முத்தான சிறுகதைகள்
- தாம்பத்திய உறவு —உளவியல் கட்டுரை
- வ. அ. இராசரத்தினம் 'குறுங்கதைகள்'

மற்றும் வைத்தியக் குறிப்புக்கள் விட்டுக் குறிப்புக்கள், திரைச் செய்திகளுடன்

இப்போது விற்பனையாகிறது

**சுடர்**

(வைகாசி இதழ்)

விலை ரூபா 1-00

**அடுத்தஇதழில்**

- தேசிய ஒருமைப் பாட்டு மாநாட்டில் நடந்த தில்லுமுல்லுகள்
- மே22—சென்னையில் நடைபெற்ற கண்டனக் கூட்ட விபரங்கள்—

ஆகியவை இடம்பெறும்.

**விரைவில் வெளிவருகிறது**

ஈழவேந்தன் எழுதிய

"தமிழ் மண் காப்போம் தாயகம் மீட்போம்!"

சுதந்திரன் வெளியீடு—4


---

### நாவலரின் தாயார் மறைவு!

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவரும் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமுமாகிய நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்களின் அருமைத் தாயார் திருமதி அப்பாபிள்ளை காலமானுர். அன்னரது ஈமக் கிரியைகள் 3. 6. 75ல் நடந்தேறின. அருமைத் தாயாரை இழந்து துயர்ப்படும் தலைவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சுதந்திரன் வாசகர்கள் சார்பிலும் நம் சார்பிலும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்.

---

### இலங்கை நாதரே...

—1-ம் பக்கத் தொடர்

Inder Malhotra என்பவர் தப்பும் தவறுமாக எழுதியுள்ள விமர்சனத்துக்கு உலகத்தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் டாக்டர் இரா. சனர்த்தனம் உடனடியாகப் பதிலளித்திருக்கிருர்.

இலங்கைத் தமிழர்கள் நடத்திவரும் உரிமைப் போராட்டம் நியாயமானது என்பதையும் சிங்கள அரசு, நடாத்திவரும் இனக்கொலை நடவடிக்கைகளையும் இலஸ்ரேட்டட் வீக்லி' ஆசிரியருக்கு டாக்டர் சனர்த்தனம் எழுதியுள்ள கட்டுரையில் புள்ளி விபரங்களுடன் எடுத்து விளக்கியுள்ளார்.

### சிறைக்கூண்டு திறந்தது!

#### தமிழ் இளைஞர்கள் விடுதலை!

கடந்த இரண்டு ஆண்டுகட்கு மேலாகவும் கடந்த ஓராண்டாகவும் விசாரணை ஏது மின்றி சிறைவைக்கப்பட்டிருந்த 10 தமிழ் இளைஞர்கள் சென்ற வாரம் விடுதலையாயினர். திரு. ஆ.பூபதி பால வடிவேற்கரசன், மணியம், சி. புஷ்பராசா, கொட்டடி நித்தியானந்தன், உரும்பராய் மகேந்திரன், ஜீவராசா, சற்குணசிலன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களில் சிலராவர்.

---


மில்க் வைற் சோப் ஸ்தாபனத்தினரின் ஆதரவில்
கமலாலயம் அளிக்கும்

"அசட்டு மாப்பிள்ளை"

வரணியூரான் எழுதும் நகைச்சுவை நாடக நிகழ்ச்சியை 15-6-75 தொடக்கம் ஒவ்வொரு ஞாயிறும் மாலை 3-45 மணிக்கு வானெலியில் கேட்டு மகிழுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிக்காக எந்த இடத்திலும் அச்சமின்றிப்போராடி வந்தவர் சிவகுமாரன். சிறைச்சாலையும் இதற்கு விதிவிலக்கல்ல — 1972ம் ஆண்டு அனுராதபுரம் சிறைச்சாலையில் அவர் வைக்கப்பட்டிருந்தபோது—அங்கு தமிழ்க் கைதிகளுக்கு எதிராகப் பாரபட்சம் காட்டப்படுவதை எதிர்த்து சிறைக்குள்ளே துணிகரமான போராட்டம் ஒன்றை நடத்தியிருக்கிறுர். அதுபற்றி அப்போது சிறையிலிருந்தபடியே — வெளியிலிருந்த தமது உடன்பிறவா சகோதரர் ஒருவருக்கு அவர் எழுதிய கடிதமொன்றை அப்படியே இங்கு தந்திருக்கிறேம். ஆர்.

# இனத்துவேஷத்துக்கு எதிராக அனுராதபுரம் சிறைச்சாலையில் சிவகுமாரன் நடத்திய அறப்போர்!

''கடந்த 17ம் திகதி திங்கட்கிழமை இரவு அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள கைதிகள் (விளக்கமறியல்) வார்ட்டில் சுமார் எட்டு மணியளவில் தமிழர்கள் அனைவரும் சிங்களக் காடையர்களால் பலமாகத்தாக்கப்பட்டார்கள்—சிங்கள உத்தியோகத்தர்கள் சிலர் மின்சார விநியோகத்தை தடைசெய்துவிட, வார்ட் முழுவதும் இருள் சூழ்ந்திருக்கும் போது கூரான இரும்பு கம்பிகளாலும் வேறு ஆயுதங்களாலும், கை, கால்களாலும் பலமாகத் தாக்கப்பட்டார்கள். இந்தத் தாக்குதலுக்கு உடந்தையாக சில சிங்கள உத்தியோகத்தர்களும் செயல்பட்டனர்.

"அவர்கள் விளக்குகளை அணைத்துவிட, இருட்டில் இருந்த தமிழ் கைதிகள் தாக்கப்பட்டனர். இதுசம்பந்தமாக உயர் அதிகாரிகளுக்கு முறையீடுசெய்யப்பட்டபோதும், இதுபற்றி எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

மீண்டும் 20ம் திகதி இரவு 11மணியளவில் விளக்குகள் அணைக்கப்பட்டு எமது கைதிகள் மிருகத்தனமாக தாக்கப்பட்டார்கள். அவர்கள் "ஐயோ! அம்மா!!" என்று போட்ட ஓலம் அதை அடுத்த வார்ட்டிலே இருந்த எனது குருதியை உறைய வைத்துவிட்டது. பின்னர் சில அதிகாரிகள் துப்பாக்கிகளுடன் வந்து வார்ட்டைதிறந்து, தமிழ் கைதிகள் அனைவரையும் வெளியே எடுத்துச்சென்றுர்கள். அச்சமயம் சிங்களச் சிறையதிகாரிகள் பேசிய பேச்சு ஒவ்வொரு தமிழனுக்கும் 'ரோச' உணர்ச்சியை கிளறும்படியாக அமைந்திருந்தது.

எங்கள் வாட்டிலோ 33கைதிகளில் 9பேர் தமிழர்கள். இஸ்லாமியத் தமிழர் மூவர், அறுவர் நாம். நாங்கள் முன்னெச்சரிக்கையுடன் எழுந்து விழிப்புடன் இருந்தமையால் எவ்வித ஆபத்துமின்றித்தப்பியிருந்தோம்.

காலையிலே வாட்டுக்கள் எல்லாம் திறக்கப்பட்டுக் கைதிகள் எல்லோரும் வெளியே வந்தார்கள். தமிழ்க் கைதிகள் அன்றைய உணவைப் 'பகிஷ்காரம்' செய்வது என்றமுடிவு, தமிழ்க் கைதிகளிடையே எடுக்கப்பட்டது— கைதிகள் உணவைப் பகிஷ்கரித்தல், சிறைச்சாலைப் போராட்டங்களில் மிகவும் உக்கிரமானது. எனவே மதிய உணவைப் பகிஷ்கரித்து நாம், சிறைச்சாலை அலுவலகத்தின்முன்அமர்ந்திருந்தோம்.

நான் ஒவ்வொரு வாட்டினுள்ளும் சென்று தமிழ்க் கைதிகளை போராட்டத்திற்கு அழைத்து சென்றபோது, ஒரு சிங்களவெறிபிடித்த அதிகாரி என்னைத் தூஷணை வார்த்தைகளால் ஏசிக்கொண்டுவந்து என்னைச் சிறைக்காரியாலயத்துள்ளே இருத்திவிட்டுச் சென்றுர். நான் சுமார் ஒரு மணிநேரமாக காரியாலயத்துள் வைத்து தூஷணைவார்த்தைகளாலும் துவேஷவார்த்தைகளாலும் திட்டப்பட்டேன். பின்னர் ஒருவாறுக, ஒரு தமிழதிகாரியின் துணையுடனே வெளியே வந்து, எனது மற்றைய சோதரர்களின் கூட்டத்துடன் சேர்ந்துகொண்டேன்.

பின்னர் சுமார் 11-30மணியளவில் உணவு மணியடித்தது. எல்லாக் கைதிகளும் வரிசையாக நின்று உணவைப்பெற்றுர்கள். நாங்கள் உணவு பெறச்செல்லவில்லை. சில அதிகாரிகள் வந்து, எம்மை உணவு பெறும்படி கூறினுர்கள். நாங்கள் மறுத்தோம். அவர்கள் அதட்டியும் நாங்கள் பணியவில்லை. உயர் அதிகாரியைக் காணும் வரையில் நாம் உணவு கொள்ளப்போவது கிடையாது என மறுத்துவிட்டோம். உடனே அவர்கள் திரும்பிச்சென்றுவிட்டார்கள்.

இவ்வேளையில், நாங்கள், அதாவது போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 32 பேரிலே இந்துக்கள்— கத்தோலிக்கர்—இஸ்லாமியர், மலைநாட்டான்— யாழ்ப்பாணத்தான் — திருகோணமலையான் — மட்டக்களப்பான் என்ற பேதமெதுவுமின்றி நாமனைவரும் ஒன்றுபட்டிருந்தோம். (எம்மிடையே மேற்கூறிய எல்லா மதங்களைச் சேர்ந்தவர்களும்,பிரதேசங்களைசேர்ந்தவாகளும் இருந்தனர்.)

யாழ்ப்பாணத்தைசேர்ந்த நானும் (சிவகுமாரன்), திருகோணமலை நடேசு, மூதூர் அல்லாபிச்சை, கிண்ணியா கனிபா, திருகோணமலை—விகோரிஸ், ஹற்றன்—மாசிலாமணி ஆகியோர் ஒற்றுமையுடன் இருந்தோம்.

பின்னர் உயர் அதிகாரி ஒருவர் வந்து எங்களில் இருவர், சிறையின் உயர் அதிகாரி (A. S. P.) அவர்களைச் சந்திக்கலாம் என்று கூறினுர். நாங்கள் அதை மறுத்து எல்லோரும் அவரைப் பார்க்கவிரும்புவதாக கூறினேம். உடனே எல்லாச் சிங்கள அதிகாரிகளும், எங்களைப்பார்த்து கேவலமான, எழுதவோ, பேசவோ கூசும் வார்த்தைகளாற் திட்டினுர்கள். அடித்துநொறுக்கப் போவதாகப் பயமுறுத்தினுர்கள். நாங்கள் அஞ்சாமல் முதற்கூறியதையே வலியுறுத்தினேம்.

அவர்கள் பின்னர், சிங்களக் காடையர் ஐவரைக் கொண்ட ஒரு குழுவுடன் சென்று (A. S. P.)யை பேட்டி கண்டனர், பின்னர் எங்களிடம் அவர்கள் வந்து. எங்களில் ஐவரை வரும்படி A. S. P. கூறுவதாகக் கூறி, எங்களில் ஐவரை கூட்டிச் சென்று A. S. P. சிங்கபாகுவின் முன்னிலையிலே நிறுத்தினர். A. S. P. யிடம் நாங்கள் நடந்த விவரங்களைக் கூறினேம். அவர் அவைகளை செவிமடுத்தார். எமது சகல குறைகளையும் அவரிடம் கூறினேம். அவற்றிற்கு பரிகாரம் காண்பதாகக் கூறினுர். இதுவரை எம்மைத்தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

தமிழர்கள் தனிவாட் ஒன்று தமக்கு தருமாறு கூறினுர்கள். அப்படியும் தனிவாட்டு தரப்படாமல், பயங்கரவாதிகளுடன் சேர்த்து ஒரு வாட்டிலேயே இப்போது விடப்பட்டுள்ளார்கள். மேலும், தற்போது பகிஷ்காரததில் ஈடுபட்ட தமிழர்கள் அனைவரும் தனித்தனியாகப் பழிவாங்கப்படுகிறுர்கள். எந்த ஒரு விடயத்திலும் வெறுத்து ஒதுக்கப்படுகிறுர்கள். இதனை திருகோணமலை 'நா. உ.' அவர்களுக்கு தெரிவிக்கும்படி திருகோணமலை இளைஞர்கள் கேட்டுள்ளார்கள். இவ்விடயம் சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்கும்படி திருகோணமலை 'நா. உ.'விடம் தெரிவிக்கவும் — அவர்மூலம் இது சம்பந்தமாக அரசாங்க அதிகாரிகளை கண்டு உரிய நடவடிக்கை எடுப்பித்து' இங்கே கலவரத்திற்கு கால்கோளாக இருந்த அதிகாரிகளுக்கும் இடமாற்றம் அளிப்பிக்கவும்.

உங்கள் தம்பி,
சிவகுமாரன்.

# சிவகுமாரன் — என் பள்ளித் தோழன்!

வீரத்திருமகன் பொன் சிவகுமாரன் மறைந்து ஓராண்டாகிவிட்டது. அந்த வீரன் வீரசொர்க்கம் அடைந்ததையிட்டு கண்ணீர் வடிக்காத தமிழ் மக்கள் இல்லை. அவனது எல்லைகடந்த வீரவுணர்ச்சியையும் சீறும் வரிப்புலி கண்டும் தயங்காத உரங்கொண்ட உள்ளத்தையும் தன்மானத்தையும் தமிழ் மக்களுக்காகத் தன் இன்னுயிரைத் தியாகஞ் செய்துவிட்டனைத நிலைக்கையில் கம்பராமாயணத்தில் வரும் "ஆயிரம் இராமர் உனக்கு ஒப்பாவரோ" என்று பரதனைப் பார்த்துக் குகன் செப்பிய கூற்றுத்தான் நினைவிற்கு வருகிறது.

வீர இளைஞர்கள் இருக்கவே இருக்கிறுர்கள். ஆனல் தமிழுக்காக தன் உயிரைத் துச்சமென மதித்துஒரு சரித்திரத்தையேபடைத்துவிட்ட சிவகுமாரனை நினைத்து மற்றையோர் பெருமைப்படவேண்டும். சுதந்திரன் ஆசிரியர் கூறியதுபோல பல தமிழ் உள்ளங்களை கொள்ளையடித்தே விட்டான் சிவகுமாரன்.

நானும் பொன் சிவகுமாரனும் ஒன்றுக கல்வி கற்றேம் யாழ் இந்துக் கல்லூரியில். என்னுடைய ஊர் கந்தர்மடம். அவர் பேருந்து வண்டியில் வந்து கந்தர்மடம் சந்தியிலே இறங்குவார். நானும் சிவகுமாரனும் மற்றைய நண்பர்களும் பின் நடையிலே கல்லூரிக்குச் செல்வோம். ஒரு கையிலே புத்தகக் கட்டு, அக்கையின் ஒரு விரலிலே சாப்பாட்டுப் [illegible] நண்பர்களுக்குப் புத்திமதியையும் கூறிக்கொண்டு வீதியிலே பாதுகாப்பாக சைகை செய்தும் அவர் செல்லுங் காட்சி மறக்கமுடியாது.

எவருடனும் சரளமாகப் பேசுவார். இதயத்திலே மாசிராது. கேள்விகளுக்கு உரத்த பதில். எந்நேரமும் துடிப்பாகக்காணப்படுவார். ஆனல் பொறுமைக்கு பூமாதேவி இவரிடம் பாடங்கற்க வேண்டும். வகுப்பிலே எந்தவிதமான சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை முன்னின்று ஆசிரியர்களுக்கு விளக்கி பொறுமையாக அதைச் சமாளித்துவிடும் திறன் அவருக்கே உண்டு. பாடசாலை நாட்களிலே அவர் தொல்லைப்பட்ட காலம் எதையுமே நாம் காணவில்லை.

மதிய போசனம் முடித்து எங்களெல்லாரையுங் கூட்டி பல விஷயங்களையும் பேசி எங்களைச் சிரிக்கவைப்பார். சிரிக்கவைத்த சிவகுமாரன் இன்று சிந்தவைத்துச் சென்றுவிட்டான். ஆசிரியர்களுக்கே இவரிடம் ஒரு தனி மதிப்புண்டு. உண்மை நண்பனென்றுல் சிவகுமாரனைத் தான் சொல்லவேண்டும். அதுவும் பல ஆயிரம் நண்பர்களைப் பெறுவதைவிட வீரத் தமிழுணர்ச்சி கொண்ட சிவகுமாரனே தேடிவந்து நட்புக் கொள்ளும்போது அதைவிட வேறு பாக்கியம் இருப்பதாக நான் கருதவில்லை.

—தில்லையம்பலம ஸ்ரீகணேசராஜா கந்தர்மடம்.

# 'நீ தொட்ட பணி முடிப்போம்'

நம்மிடையே வாழுகின்ற
நஞ்சுடைய நெஞ்சினரால்
தமிழணங்கிற் குற்றபெரும்
தலைகுனிவை நீக்குதற்காய்
இன்னல் பல சுமந்தாய்!
இன்னுயிரையும் தந்தாய்!!

நீளுலகில் தமிழ் ஒலிக்க
நீ தொட்ட பணி முடிப்போம்!
தமிழினம் ஆளும் வண்ணம்
தமிழீழம் மலரும் காண்பாய்!
சிந்தையெலாம் நிறைந்தவனே
சாந்தி கொள் சிவகுமாரா!!

—'' முருகு

# சிவகுமாரா!

பைந்தமிழ் செல்வா! பாரிலே உன்னைப்போல்
பிறந்திட வேண்டும் பிள்ளைகள் என்று

வண்டமிழ் கண்ட வனிதையர் எல்லாம்
சிந்தையில் வணங்கும் சிவ குமாரா!

மந்தைகள் அல்ல தமிழர்கள் என்று
விந்தைகள் புரிந்தாய் செந்தமிழ் காக்க
வந்தனை செய்வோம், கந்தனே மீண்டும்
தந்திடுவாய் நம் செல்வனை யென்று!

—திருகோணமலை கோகிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின விடுதலை வேழமே! வீரத்தின் திருவுருவே!

களையிழந்து, கதியிழந்து அணியிழந்து, மணியிழந்து, கண்ணீரும் கம்பலையுமாய்க் காட்சிதரும் என்னருமைத் தமிழினமே! உனக்கு நான் எவ்வாறு ஆறுதல் சொல்வேன். அதைக் கேட்டு நீ எவ்வாறு தேறுதல் அடைவாய்?

எமது இனம், எமதுமொழி அடிமைத் தளையில் சிக்கி, அந்நிய மொழியில் உக்கி, பேரும்புகழும் அற்று, வீறும் விறலும் விட்டு, கூனிக்குறுகிக்கொண்டிருக்கும் இக்கொடூர வேளையிலே; சிங்களமே ஆட்சியின் பீடம், சிங்களமே அரசியல் மொழி சிங்களமே ஆட்சிக்கு உரிமையென உரிமைபாராட்டும் இவ்வேளையிலே, தமிழுக்கு என்றொரு நாடு, தமிழுக்கு என்றொரு ஆட்சி, தமிழுக்கென்றொரு பண்பு, கலை, கலாச்சாரம் அமைக்க வந்தானே மாவீரன் மறத்தமிழ் மாணிக்கம் சிவகுமார் இல்லையென ஏங்குகின்றுயா?

கவலையை விடு: கண்ணீரைத் துடை; மாவீரன் சிவகுமாரன் எங்கும் மறைந்துவிடவில்லை. இத்தமிழ் மண்ணில், இவ்விழத் தமிழ் தாயின் மடியில்தான் இருக்கின்றான். எந்தமிழ் இரத்தத்தில்தான் ஓடிக்கொண்டிருக்கின்றான். இதற்காக நீ ஏன் அழகிழந்து சோகமாய்க் காட்சி தருகின்றாய்? உனது இனம், உனது தாய் மாற்றானின் காலடியில் மண்டியிட்டுக் கதறுகின்றாளே என்றா? துயரத்தால் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றாளே என்றா? எதற்காக வீணே கவலையடைகின்றாய்? உன் கவலை போக்க அல்லவா நாங்கள் இருக்கின்றோம். உன் நிலை மாற்றி வானளவும் உன் புகழை பறக்கவிட அல்லவா நாங்கள்இப்போது துணிந்துவிட்டோம். துணிந்த பின்னும் துயரம் கொள்ளவேண்டுமா?

இவ்விழத் தமிழகத்தில் மாவீரன் சிவகுமாரன் மடிந்தான். அவன் மடிந்த அக்கணமே இத்தமிழ் மண்ணில் ஆயிரம், ஆயிரம் சிவகுமாரர்கள் தோன்றிவிட்டோமே; இப்பொழுது எம்மினத்தில் உள்ள ஒவ்வொரு தமிழ் இளைஞனும், யுவதியும் சிவகுமாரர்களாக மலர்ந்து விட்டோமே! ஒவ்வொரு தமிழ்ப் பெற்றோரும் சிவகுமாரனின் பெற்றோர்களாக மாறிவிட்டனரே! மாற்றானின் பிடியில் சிக்கி தவித்துக்கொண்டிருக்கும் எந்தமிழ் தாயை; சிங்களத்தின் பிடியிலிருக்கும் மங்களத் தமிழினை காத்து, மறத்தமிழ் மகிமையை மாநிலம் அறியும் வண்ணம், செய்யத் துடிக்கும் எங்கள் 'வீரம் கண்டு, நிலை கண்டு மலரப் போகின்றோம். மனமார வாழ்த்தப்போகின்றாய். மனம்போல வாழப்போகின்றாய்.

ஆண்டவன் படைத்த அத்தனை உயிர்களுமே சுதந்திர தாகம் கொண்டன. அதில் முக்கியமானவன் மனிதன். இதற்கு எந்தமிழ் இனம் மட்டும் விதிவிலக்கா? ஒவ்வொரு இனத்தவனும் தனக்கென்றொரு நாடு. ஆட்சி, கலை, கலாச்சாரம் கொண்டிருக்கையில், எமக்கு மட்டும் ஏன் இவை இல்லை. நன்ருக சிந்தித்துப்பார். தமிழனுக்கென்றொரு நாடு உண்டா? ஆட்சி உண்டா? நாம் என்ன ஆண்டவனால் படைக்கப்பட்ட மானிட வர்க்கத்தின் மிகவுக் கீழ் இனத்தவர்களா? அந்நியனைப் போலன்றி எமக்கு ஏதேனும் உருவத்தில், உடலில் ஏதும் வித்தியாசமாக, குறைய ஏதேனும் உறுப்பு குறைய உண்டா? பின் ஏன் நாம் மட்டும் அந்நியனுக்கு அடங்கி, ஒடுங்கி வாழவேண்டும். அடிமையாய் இருக்கவேண்டும்? எதற்காக அடிவருடி பிழைக்கவேண்டும்?

எனவே இதை வாசிக்கும் தன்மானமிக்க தமிழ் இளைஞர்களே!யுவதிகளே! எங்கே உங்கள் வீரம்? எங்கே உங்கள் தீரம். கையிலே வாள், தரையிலே தலை. இதுவல்லவா எம் மறத் தமிழ் பரம்பரையின் வீர விளையாட்டு. இவ்வழி வந்த எமக்கு இவ்வீரத்தில் ஒரு துளியேனும் இருக்கக்கூடாதா? ஏன் இன்னும் மௌனமாயிருக்கின்றீர்கள். நம் தமிழ்த் தாய் சிங்களத்தின் பிடியிலிருந்து சிந்துகின்றாளே இரத்தக் கண்ணீர். இதைக்கண்டு என் இரத்தம் கொதிக்கின்றது. கண்கள் சிவக்கின்றன. சுதந்திர தாகம் என்னை துடித்தெழச் செய்கின்றது. உங்கள் நிலையும் இப்படித் தானே! செங்குருதி [illegible] டியேனும் சிங்களத்தின் பிடியினின்று மீட்டிடுவோம். எம் தமிழ்த் தாயை இத் தமிழ் மண்ணிலும் தமிழனுக்கென்ருெருதனிக்கொடி உரிமையாக பறக்கவிடுவோம்.

சினங்கொண்டெழும் சிங்கங்களே! சிந்தித்துப் பாருங்கள். அதோ தெரிகின்றதே, அங்குதான் உன் தாய் அந்நியன் சிங்களவனின் ஆட்சியில் அடங்கி, அடிபட்டு, நெரிபட்டு, மிதிபட்டு, உதைபட்டு சிந்தி சின்னுப்பின்னமாகிக்கொண்டிருக்கிருள்! ஓடிப் போங்கள். நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து வாருங்கள். அதுதான்...அங்கே...தான் காட்டுங்கள். உங்கள் சுதந்திர தாகத்தை. சிங்க ஏறுபோல் பாயத்துடிக்கும் சிவகுமாரர்களே... பாயுங்கள் ஒரே பாய்ச்சலாக அந்த சுதந்திர களத்தை நோக்கி. வெற்றி நிச்சயமே! இதோ பறக்கப் போகின்றது இத் தமிழ் நாட்டிலும் உரிமையாக தமிழ்க்கொடி!

—தமிழ்மலைச் சிங்கம்...சுகு

## சிவகுமாரனே உன்மீது ஆணை!

## தமிழ் ஈழத்தின் விடுதலையை இரத்தத்தினுல் எழுதி முடிப்போம்!

அன்னையின் அருந்தவமே! அற்புத ஒளிவிளக்கே! அணையா ஜோதியே! சிவகுமாரா!...நீ எங்கு சென்றாய். இங்குதான் முப்பத்தைந்து லட்சம் தமிழ் மக்களின் இதய வீணைகளை மீட்டிக்கொண்டு, ஆயிரம்கோடி சூரிய பிரகாசத்துடன் ஒளிர்ந்துகொண்டு நிற்கின்றாய்! தியாகத்தின் திருவுருவே! உயிரையே மலராக அன்னையின் பாதார விந்தங்களில் சமர்ப்பித்தாயே! உன் புகழை எப்படிப் போற்றுவது. உன் வீரத்தை எப்படி மெச்சுவது. கவிதைகள் சமைக்கும் சக்திமட்டும் எனக்கிருந்தால்! காவியங்களே படைத்து—மலராகக் கோர்த்து வானத்தில் மின்னும் நட்சத்திரங்களென உன் பாதார விந்தங்களில் பிரசவிக்கச் செய்திருப்பேன்.

தமிழினத்தின் வரலாற்றுக்குக் கறையாக நிற்கும் எட்டப்பர் கூட்டத்தைப் பூண்டோடு அழித்தால் மட்டுமே தமிழினத்துக்கு விமோசனம்—விடிவு — சுதந்திரம் என்பதை உணர்ந்தாய். சுதந்திரத்தின் விலை தமிழர்களின் இரத்தம் என்பதை மனதிற்கொண்டு கறையை நீக்குவதற்கு எவ்வளவு முயற்சிஎடுத்தாய்!தோல்வி!! தோல்வி!!! சலித்தாயா! வேங்கையென வெகுண்டெழுந்தாய்! தோல்வியே வெற்றியின் முதற்கட்டம் என்பதை நினைவுகூர்ந்து சிங்கமெனப் பாய்ந்தாய்! நாய்களால் தாக்கப்பட்டாய்! மயிர் நீப்பின் உயிர் துறக்கும் கவரிமானை எடுத்தெறிந்து உயிரையே தூசாக மதித்தாய்! என்னே உன் வீரம்!

இருந்தும் உன் ஆத்மா சாந்தியடையாது. நீ தீட்டியதிட்டம்—விட்டுச்சென்ற திட்டம்—அதாவது தமிழ் ஈழ சுதந்திரம் நிறைவேறும் வரை உன் ஆத்மா சாந்தியடையாது. நீ ஆவியாக இருந்தாலும் உன் முழுக்குறி தமிழின் மீதுதான். தமிழ் மண்ணின் மீதுதான்.

சந்திரனை வேறு பொருட்கள் அணுகாது ஊதித்தள்ளும் காற்றைப்போல்—தமிழ் என்னும் சந்திரனை வேற்று மொழி அணுகாமல் ஆவியாக நீ இருந்து ஊதித்தள்ளுவாய் என்பது எனது சந்தேக உணர்வு. வாழ்க நின் புகழ்!

வளர்க நின் திட்டம்!!

—இணுவை— ந. கணேசலிங்கம்

●

கல்தோன்றிமண்தோன்ருக் காலத்து இமயம் போன்ற தம் இதயத் தமிழுக்கு, ஆபத்து நேர்ந்த போதெல்லாம்தமிழ் அன்னையின் தவப்புதல்வர்கள் தோன்றி, அந்நியன் பிடியிலிருந்து தமிழ் அன்னையை காப்பாற்றி வந்திருக்கிருர்கள்.

நாம் இனிமேலும் சிங்கள இனத்தின் கீழ் வாழத் தயாராக இல்லை. எமக்கு வேண்டியது உரிமை, சுதந்திரம்.

இன்று உலகினை எடுத்துக் கொண்டால் உலகெங்கிலும் வாழும் "சிறுபான்மையினங்கள் எழுச்சியுற்று தமக்கென தனி நாட்டை அமைப்பதை காண்கிருேம்.

சமீபத்தில் நடந்த சைப்பிரஸ் நாட்டின் நிகழ்ச்சிகள் ஈழம் வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு படிப்பினையாக அமையட்டும் எங்கள் ஈழத்தமிழகத்தைவிட அரைமடங்கு விஸ்தீரணமுள்ள சைப்பிரஸ் தனிநாடாக முடியுமென்ருல் அதைவிட இருமடங்கு விஸ்தீரணமுள்ள, 35 லட்சம் தமிழ் பேசும் மக்கள் ஏன் தனிநாடு அமைக்க முடியாது?

செல்வாவின் தலைமையில் இயங்கும் தமிழர் கூட்டு முன்னணியும் இதைத்தான் வலியுறுத்துகிறது. இனிமேலும் தமிழ் மக்களை அடக்கி ஆள முடியும் என்று சிங்கள அரசு கனவு கண்டால் அது பகற்கனவாகத்தான் முடியும். எமது உரிமைகளை எமது இளைஞர்களின் உணர்ச்சிகளை சிறைச்சாலை மூலமும் இராணுவ அடக்குமுறை மூலமும் அழித்துவிட முடியுமென்று சிங்கள அரசு நினைத்தால், நாளை பீறிட்டு எழும் ஆயிரம் ஆயிரம் சிவகுமாரனைப்போன்ற இளைஞர்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும். தியாகம் இன்றி எந்த இனமும் வெற்றிகண்டதாகச் சரித்திரம் இல்லை.

தந்தை செல்வா அவர்களின் தலைமையில் செல்லும் ஈழத்தமிழினம் விடுதலை கண்டே தீரும், ஒரு சில எட்டப்பர்களின் சூழ்ச்சிகளினுல் தமிழினத்தின் உணர்ச்சிகளைத் தடுத்து நிறுத்திவிட முடியாது.

க. பொ. வேலாயுதம்பிள்ளை
— திருக்கோணமலை

### இளைஞர்கள் சிலரின் உணர்ச்சி வெளிப்பாடுகள்!

ஈழத்தமிழகத்தின் தலைநகராம் யாழ் பதியில் நம் துயர் துடைக்க தமிழ் அன்னையின் விலங்கு அறுக்க பிறந்த மறத்தமிழன் சிவகுமாரன்,தோன்றி மறைந்து விட்டான் என்று நினைக்கும் போது தமிழ் அன்னையின் விடிவு காலம் இன்னும் தோன்றவில்லையா என்று நினைக்கத் தோன்றுகிறது.

தமிழ்த்தாயின்விடுதலைக்கு வித்திட்ட ஒரு மாவீரன் மறைந்துவிட்டான். ஆனுல் அவன் காட்டிய வீரம் தன்னையே தமிழுக்கு அர்ப்பணித்த கோலம் எம்போன்ற இளைஞர்களை மெய்சிலிர்க்க வைத்திருக்கிறது. எம்மையெல்லாம் பின்தொடரும் படி சொல்லாமல் செய்து காட்டி விட்டுத் துயரத்துடன் எம்மை விட்டுப்பிரிந்துசென்றிருக்கிருன். எமது இனத்தின் விடுதலை வெகு தூரத்தில் இல்லை. நான் மீண்டும் வருவேன். தூங்காதீர்கள் விழிப்புடன் இருங்கள் என்று ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் எங்களை தட்டி எழுப்பிவிட்டுச் சென்றிருக்கிருன் அந்த மாவீரன்.

### நானிருப்பேன் உன்னோடு

சிவகுமார் என்ற
செந்தமிழ் வீரனின்
சிந்தை கவர் செயல்கள்
சிங்க நிகர் தமிழருக்கு
சர்க்கரைப் பொங்கலென
இனித்திடுமே
பங்கமென் தமிழுக்கென
பொங்கியெழுந்தான்
தங்கத் தமிழ் காக்க
தன்னுயிர் நீத்தான்
தம்பியின் முடிவுகண்டு
தமிழரெல்லாம் கதறியழ
எங்கோ அவன் குரல்...!
"தமிழா கண்ணீர்
வேண்டாம்
நான் என்றும் தமிழுக்கே
தயங்காமல் போராடு
நானிருப்பேன் உன்னோடு!!

—திருகோணமலை
அ. அப்துல் லத்தீப்

●

### ஆரையம்பதியில் சிவகுமாரன் நினைவாக தண்ணீர்ப் பந்தல்

தியாகி சிவகுமாரன் நினைவாக 5-6-75ல் ஆரையம்பதியில் உள்ள செல்வா நகரில் தண்ணீர்ப்பந்தல் ஒன்றை அந்த ஊரின் துடிப்புமிக்க வீர இளைஞர்கள் அமைத்திருந்தனர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

## டாக்டர் கலைஞர் வாழ்க



தமிழக முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமது 51 வது பிறந்த நாளை ஜூன் 3ம் நாள் கொண்டாடினார். கலைஞர் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் விரோதிகளின் எதிர்ப்புக்களையெல்லாம் முறியடித்து- தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் தமிழ் நாட்டுக்கும் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென ஈழத்தமிழ் மக்கள் சார்பில் நமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## கல்முனைப்பிரதேசக் கலை இலக்கியப் பேரவை

மேற்படி பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டம் ராமக்கிருஷ்ணமிஷன் பாடசாலை மண்டபத்தில் 20-6-75 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

பிரபல எழுத்தாளரும், புரட்சிக்கவிஞருமான, "மருதூர்வாணன்," தலைமையில், உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டு சொற் பொழிவாற்றுவார்கள்.

பிரபல கவிஞரும், பாடநூல் ஆசிரியருமான, ஜீவா—ஜீவரத்தினம் அவர்களும், உதயகவி, பாண்டியூரன், மணிக்கவிராயர், கலைக் கொழுந்தன், மட்டுநகர் முத்தழகு, நீலாவணைதேவராஜ், கதிரவன், ஆதவன் இசைக் குழுவினரும் கலந்து கொள்ளுகின்றனர்.

தயவு செய்து, ஏனைய கலைஞர்களும், எழுத்தாளர்களும், உடன் எம்முடன் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"கல்முனைப் பிரதேசக்கலை இலக்கியப் பேரவை,
மருதூர்வாணன்,
அல் ஹப்ரூ வீதி,
மருதமுனை — 2.
(கல்முனை)

# நினைவுச் சின்னத்தை சிதைத்தவர்கள் யார்?

## முத்தமிழ் விழா

மருதானை தொழில் நுட்பக்கல்லூரித்தமிழ் மன்றத்தினரின் முத்தமிழ் விழா 8—6—75 ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெறுகிறது. பேராசிரியர் சதாசிவம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

1974-ம் ஆண்டு தைதிங்கள் பத்தாம்நாள்யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத்தமிழ் மாநாட்டின் போது சிங்கள ஏகாதிபத்திய வெறியாட்சியின் வெறித்தனமான தாக்குதலுக்காளாகி உயிரீந்த தமிழ்த்தியாகிகளின் நினைவாக யாழ் முற்றவெளி மைதானத்தில் —வீரசிங்கம் மண்டபத்தின் எதிரே— தமிழ் இளைஞர்களால் நிறுவப்பட்டிருந்த நினைவுச்சின்னம் கடந்த (29. 5. 75) வியாழன் இரவு தரைமட்டமாக்கப்பட்டிருப்பது கண்டு தமிழ் நெஞ்சங்கள் அனைத்தும் கொதிப்படைந்துள்ளன.

இந்த ஈனத்தனமான வேலையைச் செய்தவர்கள் யார்? தமிழுக்கு உயிர் கொடுத்த தன்னிகரற்ற தியாகிகளின் நினைவுச்சின்னத்தை துணிகரமாக இப்படி தூள்தூளாக்கிய அந்த நாய்ப் பிறவிகள் யார்? அரசாங்கத்தின் ஏவல் படைகளா? அல்லது அரசுக்கு அடிவருடும் கையாட்களின் — தமிழ்த்துரோகிகளின் —சதி வேலையா? இந்தக் கேள்வியையே இன்று கொதிப்பேறிய தமிழ் உள்ளங்கள் கேட்டுவருகின்றன.

இத்தகைய ஈனத்தனத்தில் இறங்கிய அந்த அற்ப மனிதர்கள் யார் என்பது விரைவில் அம்பலமாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நினைவுச்சின்னம் 1975 சனவரி 10-ம் நாள் உலகத்தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் டாக்டர் சு. வித்தியானந்தன் அவர்கள் முன்னிலையில் தமிழ் இளைஞர்களால் இரண்டு மணித்தியாலங்களில் நிறுவப்பட்டதென்பது தமிழ் மக்கள் அறிந்ததே.


கெயிட்டி

7-வது வாரம்



சிவகுமார், விஜயகுமார், கே. ஏ. தங்கவேலு, வீரராகவன், ஜெயசித்திரா, விதுபாலா, மனோரமா ஆகியோர் நடித்த

பொண்ணுக்கு தங்க மனசு

டைரக்‌ஷன்: தேவராஜ்— மோகன்.

செல்லமகால் 8-வது ஜனத்திரள் வாரம்

நடிகர்கள்:
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
நாகேஷ் - அசோகன் - சுந்தரராஜன்,
தேங்காய் சீனிவாசன் - எஸ் வி. ராமதாஸ்,
வி. கோபாலகிருஷ்ணன்-ஜெஸ்டின்-சாண்டோ,
எம். எம். ஏ. சின்னப்பா தேவர்.
நடிகைகள்:
கே. ஆர். விஜயா,
குமாரி சச்சு - ராதிகா - கோவை காமாட்சி
இந்திரா மற்றும் தேவர் பிலிம்ஸ் குழுவினர்.
டைரக்‌ஷன்: எம். ஏ. திருமுகம்
தேவர் பிலிம்ஸ்

நல்ல நேரம்

(ஈஸ்ட்மென் கலர்)



9வது வாரம்
கிங்ஸ்லி—வெலிங்டன்
விஜயா (மட்டு நகர்)

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்,
உஷா நந்தினி ஸ்ரீகாந்த், ஜெயா,
—நடித்த—

குகநாதனின்

ராஜபார்ட் ரங்கதுரை

(ஈஸ்ட்மென் கலர்)

13ம் திகதி வெள்ளி முதல்
பிளாஸா திரையில்

சிவாஜி — மஞ்சுளா — மனோகர்
—நடித்த—

எங்கள் தங்க ராஜா

கெப்பிட்டல்

● சிவாஜி ● வாணிஸ்ரீ
● பாரதி ● சிவகுமார்

நடித்த

உயர்ந்த மனிதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஸ்ரீலங்கா நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி 194 எ. இலக்கத்தில் 1975ம் வருடம் ஜூன் மாதம் 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.